

# ஸ்ரீ சேஷ ஒளி

## திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா



ஒளி - 11 | காலாண்டிதழ் ஜூலை - செப்டம்பர் 2017 | கதிர் - 3


# நாற்புறமும் தாக்கும் நாகதோஷம்





நாகம் ஓர் அபூர்வமான தேவதை, நாகத்திற்கென்று ஒரு தனியான உலகம் உண்டு. அதுதான் நாகலோகம் என்று பெயர். நாகலோகத்தில் தேவதைகள் உண்டு. நாகதேவதை வழிபாடு தொன்று தொட்டு நடப்பிலே உள்ளது. ஆயிரம் நாக்குகள் உடையது ஆதிசேஷன். அதுவும் நாகம்தான். அரக்க குணமுடைய நாகம் காளிங்கன் அதுவும் நாகம்தான். இதுலேயே அசுர சக்தி, தேவ சக்தி இருக்கிறது. பாருங்கள். தேவ குணமுடைய ஆதிசேஷ பகவான் மேல் ஸ்ரீமன் நாராயணன் பள்ளிகொண்டு இருக்கிறார். அரக்க குணம் கொண்ட காளிங்கன் மேல் ஸ்ரீ கிருஷ்ணன் காளிங்க நர்த்தனம் ஆடி அவனை அடக்கினார். அவனது, அகங்காரத்தை ஒழித்தார். நச்சுதன்மை உடைய நாகபாம்பும் உண்டு. நச்சு தன்மை இல்லாத தண்ணீர் பாம்பும் உண்டு. பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பார்கள். நாம் மட்டும் அதற்குவிதி விலக்கா என்ன?

ஜோதிட சாஸ்திரப்படி, நவகிரகங்களில் ராகு-கேதுவுக்கு தனி இடம் கிடையாது. என்றாலும் நவகிரகங்களில் அவர்களும் உண்டு. இவர்களுக்கு சாயா கிரகங்கள் என்று பெயர். மாயதோற்றத்தை உண்டாக்குவதில் இவர்கள் கெட்டிகாரர்கள். கயிரை பாம்பாக தெரிய வைப்பார்கள். பாம்பை கயிராக தெரிய வைப்பார்கள். நாம் ஏமாந்து போய்விடுவோம். நிழல் நிஜமாக தெரியும். நிஜம் நிழலாக தெரியும். இவர்கள் ஜாதகத்தில் சரியான இடத்தில் அமரவில்லை என்றால், தவறான நேரத்தில் சரியான முடிவுகளை எடுப்போம். சரியான நேரத்தில் தவறான முடிவுகளை எடுப்போம். சித்த பிரமை கோளாறு, மனஅழுத்தம், ஞாபக மறதி, நரம்பு மண்டலங்களில் பாதிப்பு, எலும்பு மஜ்ஜையில் பாதிப்பு, மூளையில் திடீர் கட்டிகள் பக்கவாதம் இவைகள் எல்லாம் இவர்களால் ஏற்படகூடிய பாதிப்புகள், வெளிநாட்டு பிரயாணம், வெளிநாட்டில் நீண்ட நாட்கள் தங்கி வேலை பார்த்தல், கள்ளக்கடத்தல், போதை பொருள், சூதாட்டம் இவைகள் மூலம் பொருள் சம்பாதித்தல், கள்ளத்தொடர்பு பெண்களால் சாபம், பெண்களால் தொல்லை, முன்ஜென்ம பாவ தோஷங்கள் இவைகள் ஜாதகத்தில் இவர்கள் அமர்ந்து இருப்பதை பொருத்து அமைகின்றன. அவரவர் ஜாதகத்தை தனிதனியாக ஆராய்ந்து பார்த்தால் நாக தோஷம் உள்ளதா இல்லையா என்பதை நாம் அறியலாம். பொதுவாக லக்னம், 2,4,7,8, 12 இவை லக்னத்தில் இருந்து கணக்கிட்டு அதேபோல் 5,9 இந்த இடங்களில் ராகுவோ கேதுவோ ஜாதகத்தில் இருந்தால் இவர்களுக்கு கண்டிப்பாக நாகதோஷத்தால் ஏதேனும் ஒரு வகையில் பாதிப்பு உண்டு என்பதை அறியலாம்.

கடந்த திடீர் வர்தா புயலால் நமது சக்திபீடம் பாதிக்கப்பட்டு மேற்கூரைகள் எல்லாம் பறந்து, நாகமேடையும் அதனோடு இணைந்த அரச மரமும் விழுந்தது. தங்களுக்கு நினைவிருக்கலாம். அந்த பீடம் சரிசெய்யப்பட்டு கூரைகள் சீர் அமைக்கப்பட்டு நாகர்களை புனிதமாக்கி மந்திரபூர்வமாக உருவேற்றி வரும் ஜூலை மாதம் 27ம் தேதி மீண்டும் பிரதிஷ்டை செய்ய ஸத்குருவின் ஆணைபடி தீர்மானித்து உள்ளேன். அன்றைய தினம் வாஸ்துவும் இருக்கிறது. ராகு-கேது பகவான் பெயர்ச்சியும் இருக்கிறது. மனமிக்க ஒரு மலரோடு மனம் மிகுந்த இன்னொரு மலர் சேர்ந்ததுபோல், அழகுக்கு அழகு சேர்ப்பது போல், ஒரு கல்லில் மூன்று மாங்காய் அடிப்பது போல், நாக சதுர்த்தியும், வாஸ்து தேவனின் அருளும், ராகு-கேது பகவானின் அருளும், நமக்கு அபூர்வமாக சக்திபீடத்தில் கிடைக்க இருக்கின்றன. நாக தோஷம், உள்ளவர்கள், வாஸ்து தோஷம் உள்ளவர்கள், ராகு-கேது கிரகங்களால் ஜாதகத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் கண்டிப்பாக பங்கேற்று பெறும் பயன் அடையலாம்.

விவரங்களுக்கு அலுவலகத்தை தொடர்பு கொண்டு நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

நமது 18 சித்தர் சக்தி பீடத்தில் கேது பகவானை சட்டைமுனி சித்தரும், குதம்பை சித்தரும், ராகு பகவானை பாம்பாட்டி சித்தரும், அழுகணி சித்தரும் பிரதிபலித்து நாக தோஷத்தையும், சகல தோஷங்களையும் சத்குரு சேஷாத்ரி ஸ்வாமிகளோடு இணைந்து நிவர்த்தி செய்து அருள்பாலித்து கொண்டு இருக்கின்றார்கள்.

சரண் அடைந்து வழிபடுவோம்.

சகலவித நலன்களையும் அடைவோம்.

- குருஜி சர்மா


ஸ்ரீ சேஷஒளியில்
சந்தாதாரராகி
ஸத்குருவின்
திருவருள் பெறுங்கள்

சந்தா
ரூ. 101/-

# சூட்சும குருவும் ஸ்தூல குருவும்

*கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்*

*ஸ்ரீசேஷாத்ரி குரும்வந்தே பிரம்மேபூதம் தபோநிதம்*

பெருமதிப்பிற்குரிய சேஷ பக்தர்களே! வணக்கம்!

சென்ற இதழில் தங்களை சந்திக்க இயலாமைக்கு வருந்துகிறேன்.

இந்த இதழில் சூட்சும குரு, ஸ்தூல குருவைப் பற்றி எழுத விழைகின்றேன்.

சூட்சுமகுரு - கண்ணுக்கு தெரியாது.

ஸ்தூல குரு - கண்ணுக்கு தெரிவது

சூட்சுமகுரு - சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்

ஸ்தூல குரு - திரு. கே.வி.எல்.என். ஷர்மாஜி அவர்கள்

கண்ணுக்குத் தெரியாத பெருஞ்ஜோதியான பரஞ்ஜோதி சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளைத் தெரிந்து கொள்வதற்கு வழிகாட்டும் அருள்ஜோதியாக இருப்பவரே நம் ஸ்தூல குரு திரு. கே.வி.எல்.என். ஷர்மாஜி அவர்கள். தீபம் வழிகாட்டும்போது பாவத்தை போக்கும் தாபத்தோடு பக்தி எனும் தூபத்தை ஏந்தி வேதமாக வீற்றிருக்கும் நம் வேந்தராகிய சத்குருவை நோக்கிச் செல்வது நமது வேலையல்லவா?

கண்ணுக்குத் தெரியாத பரஞ்ஜோதியை

கண்ணுக்குத் தெரிந்த அருள்ஜோதி காட்டும்போது

கண்டு கடைத்தேற பக்தர்களாகிய நாம் களிப்போடு

கடைக்கோடி முதல் முதற்கோடி வரை தயாராக இருக்க வேண்டும்.

தெரியாததை தெரிந்தது கொண்டு

தெரிந்து கொண்டால் தெளிவு பிறக்கும்!

அறியாததை அறிந்தது கொண்டு

அறிந்து கொண்டால் அறிவு சிறக்கும்!

எனது வாழ்வில் நம் சூட்சும குருவை எனக்கு காட்டியவர் நம் குருஜி அவர்கள்தான். குருஜி அவர்களின் வழிகாட்டுதல்படி அணுபிசகாமல் நாம் செல்வோமேயானால் நமது வாழ்க்கைப் பாதையில் சூட்சும குருவாக விளங்கும். சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஸ்தூல குருவாக நம் கண்முன் காட்சி அளிப்பார். நம் சேஷ பக்தர்கள் பலரது வாழ்வில் நம் குருஜி அவர்களின் வழிகாட்டுதல்படி இந்த அற்புதம் நிகழ்ந்திருக்கிறது. சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளை நாம் பழனி பாதயாத்திரை செல்லும்போது நடுஇரவில் நேரடியாக சந்திக்கும் வாய்ப்பு ஒரு முறை எனக்கு கிட்டியுள்ளது. அதைப் பற்றி சில வருடங்களுக்குமுன் நான் இதே இதழில் விரிவாக எழுதியுள்ளேன்.

இறை தரிசனம்

வெறும் தரிசனத்திற்காக மட்டுமல்ல.

நம்மை நாமே புடம் போட்டுக் கொள்வதற்காக.

அக்கினி எப்படி தன்னைச் சேரும் பொருட்களின் அழுக்கை எல்லாம் நீக்குகிறதோ? அதுபோல இறைஜோதி தரிசனம் நம் பாவங்களை அழித்து புண்ணியத்தை சேர்க்கும்.

ஒரு மனிதனின் வாழ்வில் சூட்சும குரு எந்த அளவிற்கு முக்கியமோ? அதே அளவிற்கு ஸ்தூல குருவும் முக்கியம். ஏனென்றால் ஒரு ஸ்தூல குருவால் மட்டுமே சூட்சும குருவை அடைவதற்கு நமக்கு வழிகாட்ட முடியும். ஸ்தூல குரு சூட்சும குருவை காண்பதற்கு மட்டுமல்ல. பல வழிகளில் நமக்கு வழிகாட்டியாக இருக்கிறார். நமது வாழ்க்கைப் பாதையில் நமக்கு ஏற்படும் பல பிரச்சனைகளின் இன்னல்களிலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டு வெற்றி பெற நமக்கு வழிகாட்டுகிறார்.

நம் வாழ்வில் மிக அவசியம் குரு நல்வழி காட்டுதல்!

அதைவிட அவசியம் நாம் அவ்வழி செல்லுதல்!

ஆகவே சூட்சும குருவை நமக்கு காட்டி நம்மை நல்வழிப்படுத்தும் ஸ்தூல குருவின் வழி சென்று குருஜி அவர்கள் நிர்மாணித்துள்ள பதிணென் சித்தர் சக்தி பீடத்தில் கருங்கல் தரை அமைக்கும் பணிக்கு நிதி உதவி செய்து குருவழி செல்வோம்! பெருவளம் கொள்வோம்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கிறேன்
பணிவுடன்

திரு. மருதபரணி

**ஆடி மாதம் 10ம் தேதி 26-7-2017 புதன்கிழமை**

**ஆடிப் பூர விழா**

காலை 7.30 மணியிலிருந்து மாலை 6 மணி விழா அகண்ட ஸ்ரீலலிதா சகஸ்ர நாம பாராயணம் நடைபெறும் சுவாஸினிகள் அனைவரும் கலந்து கொண்டு பலன் அடையலாம்.

## சக்தி பீடத்தில்

### முக்கிய தினங்கள்

**ஜுலை**

| | |
|---|---|
| 5 | ஸ்ரீராமநவமி |
| 8 | பௌர்ணமி / குருபூர்ணிமா |
| 17 | ஆடிப்பண்டிகை |
| 23 | ஆடி அமாவாசை |
| 26 | ஆடிப்பூரம் (அகண்ட லலிதா ஸகஸ்ரநாம பாராயணம்) |
| 27 | ராகு கேது பெயர்ச்சி<br>நாக சதுர்த்தி/பஞ்ச ஸ்தல விருட்ச பிரதிஷ்டை |
| 28 | ஹஸ்தம் |

**ஆகஸ்ட்**

| | |
|---|---|
| 3 | ஆடிப்பெருக்கு |
| 4 | வரலக்ஷ்மி விரதம் (அரூபலக்ஷ்மி பிரதிஷ்டாதினம்) |
| 7 | பௌர்ணமி / சந்திர கிரஹணம் |
| 15 | ஆடிக்கிருத்திகை |
| 23 | அமாவாசை |
| 25 | ஹஸ்தம் / ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி |

**செப்டம்பர்**

| | |
|---|---|
| 2 | குரு பெயர்ச்சி |
| 5 | பௌர்ணமி |
| 6 | மஹாளய பக்ஷம் ஆரம்பம்<br>ஆவணி அவிட்டம் |
| 19 | அமாவாசை |
| 20 | நவராத்திரி ஆரம்பம் |
| 29 | சரஸ்வதி பூஜை |
| 30 | விஜய தசமி |

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**
அமைந்துள்ளது.

முகவரி எண். 1, சன்னதி தெரு,
மாடம்பாக்கம், சென்னை - 600 126.
போன் : 044-22281408, 22280407,
29710972, 8754486723
பாலாலயம் : 2228 1337

பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K
தி.நகரிலிருந்து 5A Cut Service
குரோம்பேட்டையிலிருந்து S3, S10 மினி பஸ்
இறங்குமிடம் : சிவன் கோயில்

**SRI SESHADRI SWAMIGAL TRUST - MUMBAI OFFICE ADDRESS**
A-11, Room No. 8, Ground Floor,
Shahid Bhagat Singh, CHS Ltd.,
Bindra Complex, Mahakali Caves
Road, Near Holi Spirit Hospital,
Andheri, Mumbai - 93. Ph : 28387116

**ஸ்ரீ சேஷ ஒளி**
**விளம்பர கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/ வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |

# ராசி பலன்கள் ஜூலை - செப்டம்பர் 2017

## மேஷம்



(அசுவினி, பரணி, கார்த்திகை (முதல் பாதம்)

**ஜூலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். ராஜயோகம் ஏற்பட்டு உள்ளதால் கடல் வாணிபம் செய்பவர்களுக்கு சுமாரன லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஆதாயம் கொடுக்கும். மாணவர்களுக்கு குழப்பம் ஏற்பட்டு விலகும். விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு பேச்சில் கவனம் தேவை. பணியாளர்கள் புதிய முடிவுகளை தள்ளி போடுவது நல்லது. கணவன் மனைவி உறவு சாதாரண முறையில் இருக்கும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிகிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 4 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் நீச்சம் அடைந்துள்ளார். குடும்பத்தில் சுபவிரையங்கள் ஏற்படும். திருமண தடை நீங்கும். காதல் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு மனதிற்கினிய சம்பவங்கள் நடக்கும். மாணவர்களுக்கு எதிர்பாராத நல்ல திருப்பம் ஏற்படும். விவசாயிகள் அரசாங்கத்தால் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு உடன்பிறப்புகளால் தொல்லை ஏற்படும். பணியாளர்களுக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகப்பெருமான், கிழமை : செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ மகாப்போகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி வரை, 28 முதல் 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பொருளாதார விஷயத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். மாத பிற்பகுதியில் திருமண தடை அகலும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்கவும். கலைஞர்களுக்கு மனகுழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்கவேண்டும். விவசாயிகளுக்கு புத்துணர்ச்சி ஏற்படும். அரசியல்வாதிகள் எதிர்பாராத பணவரவை பெறுவார்கள். பணியாளர்களுக்கு கவன குறைவால் பதவி இறக்கம் ஏபடும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஜா, கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பாம்பாட்டி சித்தர், அழுகனி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, ராகுகாலம். சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

**ஜூலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். குருபலம் கூடியுள்ளதால் திருமண தடை அகலும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழில் அதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு எதிர்பாராத பணவரவு ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு திடீர் பணவரவு கிடைக்கும். அரசியல்வாதிகள் பதவி உயர்வு அடைவார்கள். பணியாளர்கள் மேல் அதிகாரியிடம் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளதால் நினைத்தது நிறைவேறும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். திருமண தடை நீங்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத பணநஷ்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பாம்பாட்டி சித்தர், அழுகணி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 6 தேதி வரை, 30 முதல் செப். 1 தேதி வரை, முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். காதல் - திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். தலைமை ஆசிரியர்களால் மாணவர்களுக்கு பாராட்டு கிடைக்கும். விவசாயிகள் வீண் சண்டை சச்சரவுகளில் ஈடுபட வேண்டாம். அரசியல்வாதிகளுக்கு அயல்நாட்டு பிரயாணம் உண்டு. பணியாளர்கள் சம்பள உயர்வு பெறுவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 29 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)

**ஜூலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். உணர்ச்சி வயப்பட்டு முடிவுகளை எடுக்க வேண்டாம். கணவன் மனைவி விட்டுக்கொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள் தொழில் அதிபர்கள் சுமாரான லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு தொழிலில் திடீர் திருப்பம் ஏற்படும். மாணவர்களுக்கு நினைத்த இடத்தில் இடம் கிடைக்கும். விவசாயிகளுக்கு ஆபரண சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகள் நில தகராறில் ஈடுபட வேண்டாம். பணியாளர்களுக்கு மாத பிற்பகுதியில் பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் 3ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். கணவன் மனைவி உறவு வழக்கம்போல் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அவசர முடிவுகளை எடுக்கவேண்டாம். கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். மாணவர்கள் கடினமாக உழைத்தால் நல்ல பலன் அடையலாம். விவசாயிகளுக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகள் சொத்து தகராறில் ஈடுபட வேண்டாம். பணியாளர்கள் நிதானத்துடன் செயல்படுவது நல்லது. பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

ராசிநாதன் 3ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பேச்சில் நிதானம் கவனம் தேவை. கணவன் மனைவி சண்டை சச்சரவுக்கு இடம் கொடுக்க வேண்டாம். விவசாயிகள் தொழிலதிபர்களுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு தொழிலில் திருப்பம் ஏற்பட்டும். மாணவர்களுக்கு உடல் நலத்தில் கவனம் தேவை. விவசாயிகளுக்கு பணவரவு உண்டு. அரசியல்வாதிகள் சகோதர சகோதரிகளால் பாதிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பொதுவாக இந்த மாத சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 29 முதல் 1 அக். தேதி வரை, 2 முதல் 4 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

## கடகம்



(பூனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

**ஜூலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். பொருளாதார முடக்கம் ஏற்படும். திட்டமிட்டு செலவிடுவது நல்லது. கணவன் மனைவி உறவில் சலனம் ஏற்படும். தொழில் அதிபர்கள் வியாபாரிகள் கடல் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. கலைஞர்களுக்கு நண்பர்களால் உதவி உண்டு. மாணவர்கள் நண்பர்களுடன் எச்சரிக்கயைாக பழக வேண்டும். விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் உடல்நலம் பாதிக்கப்படும். பணியாளர்கள் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாக வே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் 4ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பணமுடக்கங்கள் ஏற்படலாம். சிக்கனம் தேவை, கணவன் மனைவி விட்டுகொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு புதிய தொடர்பு ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஆரம்பத்தில் குழப்பம் ஏற்பட்டாலும் நீங்கும். விவசாயிகளுக்கு மருத்துவ செலவுகள் உண்டு. அரசியல்வாதிகள் சூழ்ச்சிகளால் பாதிக்கப்படுவார்கள். பணியாளர்கள் மேல் அதிகாரிகளை அனுசரித்து செல்லவும். பொதுவாக இந்த மாதம் சுமாரன பலன்களே நடைப்பெறும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : செவ்வாய், திசை : தென் மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியப்பன், கிழமை : வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

ராசிநாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். உடல் நலத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி இடையே சலனங்கள் ஏற்படம். வியாபாரிகள் தொழிலதிபர்கள் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. கலைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டு முடிவுகளை எடுக்க வேண்டாம். மாணவர்களுக்கு ஞாபக மறதி ஏற்படும். பரிகாரம் செய்து கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு மருத்துவ செலவு ஏற்படும். அரசியல்வாதிகள் வீண் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். பணியாளர்கள் முடிவுகளை தள்ளி போடுவது நல்லது. பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஜா, கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 4 முதல் 6 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

குருஜி கே.வி.எல்.என். சர்மா

## சிம்மம்



(மகம், பூரம்,
உத்திரம் 1ம் பாதம்)

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். காதல்-திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழில் அதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு தொழிலில் புதிய யுக்திகள் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகள் தொழிலை விரிவுபடுத்தலாம். அரசியல்வாதிகளுக்கு பெண்களால் ஆதாயம் உண்டு. பணியாளர்களுக்கு திடீர் பணவரவு உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபிட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் விரையம் பெற்றுள்ளார். குடும்பத்தில் அமைதி நிலவும். காதல்-திருமணம் கைக்கூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகள் நிலதகராறில் ஈடுபட வேண்டாம். பணியாளர்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகப்பெருமான், செவ்வாய்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். நினைத்த காரியம் நிறைவேறும். திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். மாணவர்களுக்கு உடல் நலத்தில் கவனம் தேவை. விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு எதிர்பாராத பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கன்னி



(உத்திரம் 2, 3, 4
பாதம், ஹஸ்தம்,
சித்திரை 1, 2 பாதம்)

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். அடிக்கடி சோதனைகள் ஏற்பட்டு அகலும். பொருளாதார நெருக்கடி ஏற்படும். திருமணத்தை தள்ளி போடுவது நல்லது. தொழிலதிபர்கள் வியாபாரிகளுக்கு பணமுடக்கம் ஏற்படும் எச்சரிக்கை! கலைஞர்களுக்கு பித்ருராஜித சொத்துகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு வாகன சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகள் பதவி மாற்றம் அடைவார்கள். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஜென்ம குருவால் மனதில் வாட்டம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பணமுடக்கத்தினால் சிரமப்படுவார்கள். கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. கலைஞர்களுக்கு மனபுழுக்கம் ஏற்பட்டு நீங்கும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். விவசாயிகள் நகைகளை அடமானம் வைக்க வேண்டும். அரசியல்வாதிகள் அரசாங்கத்தால் வஞ்சிக்கப்படுவார்கள். பணியாளர்கள் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபிட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

ராசிநாதன் விரையம் பெற்றுள்ளார். மனபுழுக்கம் ஏற்பட்டு நீங்கும். கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அவசர முடிவுகளை தவிர்க்க வேண்டும். சின்னதிரை கலைஞர்கள் லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கும். விவசாயிகளுக்கு மானிம்யம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு சகோதரர்களால் விரையம் ஏற்படும். பணியாளர்களுக்கு பொருளாதார முடக்கம் ஏற்படும். எச்சரிக்கை. பொதுவாக இந்த மாத முற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

## துலாம்



(சித்திரை 3, 4 பாதம்,
சுவாதி, விசாகம்
1, 2, 3, பாதம்)

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் எட்டாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் சுபவிரையங்கள் ஏற்படும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழில் அதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு மருத்துவ செலவு ஏற்படும். மாணவர்கள் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகள் பேச்சில் கவனமாக இருக்கவேண்டும். தந்தை வழி சொத்தால் அரசியல்வாதிகளுக்கு பிரச்சனை ஏற்படும். பணியாளர்களுக்கு புதிய வீடு வாங்கும் யோகம் ஏற்படும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் பாக்கியம் அடைந்துள்ளார். குடும்பத்தில் மனதிற்கினிய சம்பவங்கள் நடக்கும். திருமணம் கைக்கூடும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். கணவன் மனைவி உறவில் முன்னேற்றம் உண்டு. வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். கலைஞர்களுக்கு கௌரவ பட்டம் கிடைக்கும். மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். விவசாயிகள் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். அரசியல்வாதிகளுக்கு கட்சி தாவும் எண்ணம் ஏற்படும். பணியாளர்களுக்கு பணவரவு திருப்திகரமாக இருக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். வெளிநாட்டு தொடர்பால் ஆதாயம் உண்டு. கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். சின்னதிரை கலைஞர்களுக்கு புதிய தொடர்பு ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். குடும்பத்தில் சலசலப்பு ஏற்பட்டு பின்பு நீங்கும். அரசியல்வாதிகளுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பணியாளர்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் சுபவிரைய மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஜா, கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

## விருச்சிகம்



(விசாகம் 4ம் பாதம்,
அனுஷம்,கேட்டை )

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் எட்டாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். காதல் திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழில் அதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு மனதிற்கினிய சம்பவம் நடக்கும். மாணவர்களுக்கு விரும்பிய பாடம் கிடைக்கும். விவசாயிகள் முரண்பாடுகளை தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகளுக்கு சகோதர சகோதரிகளால் செலவு உண்டு. பணியாளர்களுக்கு சம்பள உயர்வு உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் 9ம் இடத்தில் நீசம் அடைந்துள்ளார். தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. திருமணத் தடை நீங்கும். விவசாயிகள் தொழில் அதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு கடல் பிரயாணத்தில் மூலம் லாபம் அடைவார்கள். மாணவர்கள் வீண் அலைச்சலை குறைக்க வேண்டும். விவசாயிகளுக்கு நிலம் வாங்கும் யோகம் உண்டு. தந்தை வழி சொத்தால் அரசியல்வாதிகளுக்கு பிரச்னை ஏற்படும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகப்பெருமான், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் 19 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியிருப்பதால், குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். ஏழரை சனியின் பாதிப்பு இருப்பதால் பிரயாணத்தில் கவனம் தேவை. காதல்-திருமணம் கைக்கூடும். தம்பதிகள் உறவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிகலாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு திடீர் பணவரவு உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13 முதல் 15 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

## தனுசு



(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் பத்தாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு மந்த நிலை காணும். குடும்ப பொருளாதாரத்தை திட்டமிடுவது நல்லது. கணவன் மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். சின்னத்திரை கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்கள் நன்றாக படிக்கவேண்டும். விவசாயிகள் கடன் வாங்குவதை தவிர்க்கவும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத மருத்துவ செலவுகள் ஏற்படும். பணியாளர்கள் இடமாற்றத்திற்கு முயற்சி செய்ய வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளதால் திருமணம் கைக்கூடும். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. பிரயாணத்தின்போது கவனம் தேவை. கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் கெளரவிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மனசலனம் ஏற்பட்டு நீங்கும். எதிலும் எங்கும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பிரயாணத்தின்போது கவனம் தேவை. கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்பட்டு நீங்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் வியாபாரத்தை விரிவுப்படுத்த வேண்டாம். இசை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். மாணவர்களுக்கு நண்பர்களால் உதவி உண்டு. விவசாயிகளுக்கு மருத்துவ செலவு ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு பித்ருஜித சொத்துகளால் குழப்பங்கள் ஏற்படும். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஜா, கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மகரம்



(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பலம் கூடியிருக்கிறது. பணபுழக்கம் திருப்திகரமாக இருக்கும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். திருமணத் தடை அகலும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு குழந்தைகளால் ஆதாயம் உண்டு. மாணவர்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். விவசாயிகளுக்கு ஆபரண சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு மகான்களின் தரிசனம் கிடைக்கும். பணியாளர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்படலாம். பொதுவாக இந்த மாதம் விரும்பிய திருப்பங்களை கொடுக்கும். நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜன், சக்திபீட கணபதி, ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் இருப்பதால் மகான்களின் தரிசனம் கிடைக்கும். ஆன்மீக பயணம் உண்டு. கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். திருமண தடை நீங்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அரசாங்கத்தால் லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு மருத்துவ செலவு உண்டு. மாணவர்கள் பெற்றோரை அனுசரித்து செல்லவும். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகள் குடும்பத்தில் கணவன் மனைவி இடையே குழப்பம் ஏற்படும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சுற்றுலா செல்லும் வாய்ப்பு உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், கிழமை : செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியிருக்கிறது. குருவின் பார்வை ராசிக்கு விழுவதால் சோதனைகளை சமாளிக்கலாம். சுக்ரன் ராகு 7ம் இடத்தில் இருப்பதால் கணவன் மனைவி விட்டு கொடுத்து பழக வேண்டும். வீண் சந்தேகங்கள் இருக்க கூடாது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். நாட்டிய கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். மாணவர்களுக்கு உடல் நலம் பாதிக்கப்படலாம். எச்சரிக்கை. விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகள் சொத்து சேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிற்றுக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் 19 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கும்பம்



(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் பத்தாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கடின உழைப்பு தேவைப்படுகிறது. உணர்ச்சி வயப்பட்டு முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்கவும். கலைஞர்களுக்கு புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. மாணவர்கள் நன்றாக படிப்பார்கள். விவசாயிகளுக்கு நண்பர்களால் உதவி கிடைக்கும். குழந்தைகளால் அரசியல்வாதிகளுக்கு பிரச்சனை ஏற்படம். பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்கவேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பாம்பாட்டி சித்தர், அழுகணி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 29 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மறைந்த குருவால் பணமுடக்கம் ஏற்படும். கணவன் மனைவி விட்டுக்கொடுத்து பழகுவதும் நலம். வியாபாரிகள்,தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு குழந்தைகளால் பெருமை ஏற்படும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். கடின உழைப்பினால் விவசாயிகளுக்கு ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு கொலை மிரட்டல் வரலாம். எச்சரிக்கை. பணியாளர்கள் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மறைவிடத்தில் குருபகவான் இருப்பதால் நிதானத்தை கடைபிடிக்கவேண்டும். கணவன் மனைவி வாக்குவாதத்தில் ஈடுபட கூடாது. வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு வாடிக்கையாளர்களிடம் சலசலப்பு ஏற்படம். கலைஞர்களுக்கு உடல்நலம் பாதிக்கப்படலாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பெண்களால் தொல்லை ஏற்படும். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சூலினி துர்க்கா, வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மீனம்



(புரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். கேசரி யோகம் ஏற்பட்டுள்ளது. நினைத்தது நிறைவேறும். காதல்-திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழில் அதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். மாணவர்கள் நன்றாக முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு தர்ம சிந்தனை ஏற்படும். அரசியல்வாதிகள் கெளரவிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு நல்ல இடமாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 4 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

ராசிநாதன் சப்தமத்தில் சஞ்சரிக்கிறார். காதல்-திருமணம் கைக்கூடும். குடும்பத்தில் சுபசெலவுகள் ஏற்படும். நீண்ட நாள் தடைப்பட்ட விஷயங்கள் அனுகூலமாக மாறும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். சின்னதிரை கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு வாகனச் சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகள் கெளரவிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், கிழமை : செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியிருப்பதால் காதல் - திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். கலைஞர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு திடீர் பணவரவு உண்டு. சில அரசியல்வாதிகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய கூடிய நிலைமை ஏற்படும். பணியாளர்களுக்கு பணவரவு திருப்திகரமாக இருக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முனீஸ்வரர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**30-6-2017 அன்று வருஷாபிஷேகம் குருஜி அவர்கள் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது. அன்னதானமும் நடைபெற்றது.**



கும்ப கலசங்கள் அலங்கரித்திருக்கும் காட்சி



பூர்ணாஹுதி காட்சி





குருஜி அவர்களின் சிறப்புரை

## நவராத்திரி விழா

**21-9-2017 நவராத்திரி பூஜை ஆரம்பம்**
**9 நாட்களும் விசேஷ அலங்காரம் நடைபெறும்**
**29-9-2017 சரஸ்வதி பூஜை**

நவராத்திரி 9 நாட்களும் கொலு வைத்து பூஜை சிறப்பாக நடைபெறும். பூஜைக்கு, நைவேத்யத்திற்கு (சுண்டல்) தேவையான பொருட்கள் வாங்கி தரலாம்.

## இந்து தர்ம சாஸ்திரம்

பக்தர்கள் அடிக்கடி கோயிலுக்குச் சென்றால்தான் கோயில் சுத்தமாக இருக்கும். அங்கு பணிபுரிகிறவர்களுக்கும் ஒரு பக்தி சிரத்தை ஏற்படும். இந்த பக்தியால் பகவான் காரியங்கள் தடையின்றி நடக்கும். அதனால் தவறாமல் கோயிலுக்குச் சென்று வாருங்கள்

## குருஜி பதிலளிக்கிறார்!

**அடுத்த இதழிலிருந்து தொடங்குகிறது.**
**அன்பர்கள் ஒரு வரி கேள்விகள் எழுதி அனுப்பலாம்.**

## பசு மடம்



பக்தர்கள் அனைவரும் பசுமடத்தை தரிசித்து பசு பராமரிப்புக்கு/தீவனத்திற்கு தாராளமாய் நிதியுதவி அளியுங்கள்.

பதினென் சித்தர் சக்தி பீடத்திலுள்ள கோமாதாக்களில் ஒன்றை தத்தெடுத்து கோதானம் செய்யலாம்.

**விபரங்களுக்கு : 044- 24938734, 24953793**

**கோமாதாவை பராமரிக்க நிதிதனை அள்ளித் தாருங்கள்.**

# சேஷாத்ரி நாதா - 2

கலங்கும் மனத்தை தெளிய வைத்தாய்
காலம் மூன்றிலும் நீங்காது நின்றாய்
கருணாமூர்த்தியே சேஷாத்ரிநாதா..
.
காரணமாய் நின்று
காரியம் நிகழ்த்திடும்
காந்த சொரூபனே சேஷாத்ரிநாதா...

கிரிவலம் வருபவர்க்கு
கிருபை செய்திடும்
கிருபாகரனே சேஷாத்ரிநாதா...

கீழ்மையை மாற்றி
கீர்த்தியைச் சேர்த்திடும்
கீர்த்திவாசனே சேஷாத்ரிநாதா....

குன்றின் மணி புண்ணியத்தை
குன்றாய் ஆக்கிடும்
குணக்கடல் நீயே சேஷாத்ரிநாதா...

கூலிக்கு மண் சுமந்த
கூடனாயகன் உளம் கவர்ந்த
கூத்தபிரானே சேஷாத்ரிநாதா...

கெட்டவன் வாழ்வில்
கெடுதலை நீக்கிடும்
கெங்காதரனே சேஷாத்ரிநாதா...

கேட்டதும் வரம் தந்து
கேடில்லா புகழ் நல்கும்
சேஷாத்ரிநாதா சத்குருநாதா...

கை தப்பிய வேளையில்
கைபிடித்துக் காத்தாய்
கைலாசநாதனே சேஷாத்ரிநாதா...

கொடுமையை மாற்றி
கொள்கையைச் சேர்த்து
கொழுக்கொம்பானாய்ச் சேஷாத்ரிநாதா...

கோலக்ஷ்மி அன்பன்
கோமகன் இரமணனின்
கோமுனி நீயே சேஷாத்ரிநாதா...

கௌரியின் மகன் நீ
கௌத்துவம் அற்ற நீ
கௌதமனாய் வாழ்ந்த சேஷாத்ரிநாதா...

ஏன் இந்த குழப்பம்?
ஏன் இந்த மயக்கம்?
என்ன செய்வேன்? நான் சேஷாத்ரிநாதா

என் கரம் பிடித்து
என் துணையானாய்
என் தெய்வம் நீயே சேஷாத்ரிநாதா

---

# ராகு கேது பெயர்ச்சி ஹோமம்

## ஆடி 11ம் தேதி வியாழக்கிழமை **27-7-2017** காலை 8 மணிக்கு ஆரம்பம்

**மேஷம், மிதுனம், சிம்மம், கன்னி, தனுசு, மகரம், கும்பம், மீனம்**
**ராசிக்காரர்கள் பரிகாரம் செய்து கொள்ளவேண்டும்.**

---

### கீழ்க்கண்ட போற்றிகளை படித்து பலன் பெறலாம்

### இவர் கேது கிரஹத்தை பிரதிபலிப்பவர்
### சட்டைமுனி சித்தர்

சிவகாசியின் புதல்வரே போற்றி!
ஸ்ரீ சக்ரத்தை தரிசனம் செய்தவரே போற்றி!
தேகத்தைக் காப்பாற்றுவாய் போற்றி!
ஜலத்தில் வாசம் செய்பவரே போற்றி!
அக்னி பகவானை பூஜிப்பவரே போற்றி!
வருண பகவானை வணங்குபவரே போற்றி!
நவக்கிரஹங்களின் ஆசிகளை அளிப்பவரே போற்றி!
ஸ்ரீ ஸ்கந்தனை வணங்குபவரே போற்றி!
கடன் தொல்லையைப் போக்குபவரே போற்றி!
நோய்களை அழிப்பவரே போற்றி!
வில்வ அர்ச்சனை ப்ரியரே போற்றி!
காமக்ரோதத்தை அழிப்பவரே போற்றி!
சமுத்திரத்தை பூஜிப்பவரே போற்றி!
ஸ்ரீம் பீஜாட்சரத்தில் வசிப்பவரே போற்றி!
ராமநாமப்ரியரே போற்றி!
எல்லா ஐஸ்வர்யங்களையும் அளிக்கும் ஸ்ரீ சட்டைமுனி சித்தர் ஸ்வாமியே போற்றி! போற்றி!

### இவர் ராகு கிரஹத்தை பிரதிபலிப்பவர்
### ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர்
### (ஸ்ரீ மருதமலைச் சித்தர்)

ஸ்ரீ நாகாபரணம் உடைய சிவனை வணங்குபவரே போற்றி!
ஆலகால விஷத்திலிருந்து காப்பவரே போற்றி!
சர்ப்பரட்சகரே போற்றி!
முருகனின் ப்ரியரே போற்றி!
பசும்பாலில் பிரியம் உள்ளவரே போற்றி!
மூன்று வர்ணங்கள் கொண்டவரே போற்றி!
வாக்கில் சுத்தம் உடையவரே போற்றி!
ஸ்ரீ ஆதிசேஷனை வணங்குபவரே போற்றி!
விஷத்தை முறிப்பவரே போற்றி!
நடுநிசியில் சஞ்சரிப்பவரே போற்றி!
ஜந்துக்களின் உருவம் உடையவரே போற்றி!
சனீஸ்வர பகவானின் நண்பரே போற்றி!
ஓம் வசி பீஜாட்சரத்தில் வசிப்பவரே போற்றி!
சிவனுக்கு ஆபரணமாக இருப்பவரே போற்றி!
நந்தி தேவரின் நண்பரே போற்றி!
ஸ்ரீ பாற்கடலில் வாசம் செய்யும் பூஜ்ய சித்தர் ஸ்ரீ பாம்பாட்டி சித்தர் ஸ்வாமியே போற்றி! போற்றி!

---

## நாக சதுர்த்தி நாள் 27-7-2017 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பம்

**நாக பிரதிஷ்டை / பஞ்ச ஸ்தல விருட்ச பிரதிஷ்டை**
**சகல பாவ தோஷங்களை நீக்கும் பஞ்ச ஸ்தல விருட்ச பிரதிஷ்டை**
**அரசு, வேம்பு பிரதிஷ்டை**

ஆடி மாதம் 11ம் தேதி 27-7-2017 வியாழக்கிழமை அன்று நடைபெறும். நாகசதுர்த்தியை முன்னிட்டு சர்ப்ப ஹோமம் நடைபெற உள்ளது. நாக தோஷம் நீங்கி நன்மை ஏற்பட அன்பர்கள் ஹோமத்தில் கலந்து கொள்வது நல்லது. ராகு கேது தோஷ பரிகாரத்திற்கு திருநாகேஸ்வரத்திற்கு செல்ல முடியாதவர்கள் இங்கு பூஜை செய்து பலன் அடையலாம்.

## கந்தர் அனுபூதி

15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருட்பெரும் புலவரான அருணகிரிநாதர் என்னும் இறைசித்தரால் இயற்றப்பட்ட ஒப்பற்ற பதிகள் இது, பிள்ளையார் வணக்கத்துடன் ''நெஞ்சக்கனகல்லும்'' எனத் துவங்கும் கந்தர் அனுபூதி, 51 பாடல்களைக் கொண்டது. பத்தாம் திருமறையான திருமந்திரம் நூலுக்கு இணையாக கந்தர் அனுபூதி கருதப்படுவதாக ஆன்றோர்கள் கூறுகின்றனர். திருமூலர் பெருமானார், இடையன் உடலுக்குள் புகுந்து திருமந்திரம் உரைத்தாராம். அதுபோல அருணகிரிநாதர், கிளி உருவம் கொண்டு, விண்ணுலகம் சென்று, அமிர்தமலராகிய கற்பக மலர்களை கொண்டு வந்து, முருகப்பெருமான் தோளில் அமர்ந்து அம்மலர்களை அர்ச்சித்து, கந்தரனுபூதி பாடியதாகப் போற்றப் படுகிறது. ஒரு முறை அருணகிரிநாதர் உடல்நலம் குன்றிய தருணத்தில், மனம் நொந்து, அண்ணாமலையார் கோவில் கோபுர உச்சியில் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற பொழுது, ஆறுமுருகப் பெருமான் தனது திருக்கரங்களால் இவரைத் தாங்கி, உயிர் காத்ததாக தலபுராணங்கள் விவரிக்கின்றன. பொருள் அழகும், சொல்நடையும் மிளரப் பெற்ற ஒப்பற்ற இப்பதிகத்தில், எண்ணற்ற பலனர்கள் கூறப்பட்டுள்ளது. தன்னடக்கம் மேன்மை பெற, தீராத பிணி தீர, வினைகள் அகல, குருவருள் ஓங்க, இறையருள் நிலைத்திருக்க, இக்கந்தர் அனுபூதியை, நம் பதினெண் சித்தர் சக்திபீடத்தில் வள்ளி, தெய்வானையுடன் வீற்றிருக்கும் முருகப்பெருமான் முன்பு பாராயணம் செய்து, மனமுருகி பிரார்த்தனை செய்துவர, நோயற்ற பெருவாழ்வும், உயர்ந்த புகழும், சிறந்த பொருள் வளமும் பெருகும் என்பது பக்தர்கள் கண்ட உண்மையாகும்.

- உமாபரணி

## சக்தி பீடமும் தொடர் நாம சங்கீர்த்தனமும்

(மன்னார்குடி ஸ்ரீ பாபு ராஜகோபால பாகவதர்)



மாடம்பாக்கம் சக்திபீட ப்ருந்தாவனத்தில் 18 ஆண்டுகளுக்கு மேலாக வாரத்தில் மூன்று நாட்கள், அதாவது ஒவ்வொரு புதன், விழாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமையில் மாலை 4.30 மணி முதல் சம்ப்ரதாய பஜனை-நாம சங்கீர்த்தனம் தொடர்ந்து நடைபெற்றுவருவது அனைத்து பக்தர்கள் அறிந்த விஷயமாகும். இதுவரை அதாவது 15-6-2017 நிலவரப்படி 1728 (ஒரு ஆயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு) நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. நமது மதிப்பு மரியாதைக்குரிய குருஜி அவர்களின் ஆசிகள் கலந்து அன்புக் கட்டளைப்படி நாம ஸங்கீர்த்தனம் காலவரையறையன்றி தொடர்கிறது. இந்த நாம ஸ்ங்கீர்த்தனம், மன்னார்குடி ஸ்ரீ பாபு ராஜகோபால பாகவதர் மற்றும் அவர் குழுவினரால் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சி ப்ராசீன ஸம்ப்ரதாய முறைப்படி நடைபெறுகிறது. ப்ராசீன, ஸம்ப்ரதாய பஜனை என்றால் என்ன?

தொடக்கத்தில் புண்டரீகம் போட்டு, ஹரி நாராயண, ஸ்ரீ நாராயண, போன்ற நாமாவளிகள் இசைக்கப் பெற்று, தொடர்ந்து த்யான ஸ்லோகங்கள் சொல்லப்படுகின்றன. பிறகு தோடய மங்களம் என்று சொல்லப்படுகின்ற 5 கீர்த்தனைகள், 5 ராகங்கள் நான்கு தாளங்களில் பாடப்படுகின்றன. இந்த 5 பாடல்களை இயற்றியவர்கள் அன்னமாச்சார்யர், விஜயகோபால ஸ்வாமி ஆகிய இரு பெரியோர்கள் ஆவர். பகவானுக்கு வரவேற்புரை போன்ற பொருள்படும்படி இப்பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. பஜனை பாடல்களுள் இது மிகவும் முக்கியமாகன தொடக்கமாகும். திருப்பதி வேங்கடஜலபதி புரட்டாசி மாத ப்ரும்மோத்ஸவத்தில் பெருமாள் புறப்பாட்டின்போது அன்னமாச்சார்யர் என்ற பாகவதர், ஸாகித்ய கர்த்தா, இந்த தோடய மங்கள கீர்த்தனைகளை வீதிகளில் பாடி வந்திருப்பதாக வரலாறு தெரிவிக்கிறது. தோடய மங்கள கீர்த்திகளை தொடர்ந்து பஜனை ஸம்ப்ரதாயத்தை தென்னாட்டில் முறைப்படுத்தி வழி வகுத்த குருமார்கள், மருதாநல்லூர் ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள், கோவிந்தபுரம் ஸ்ரீ போதேந்த்ர ஸ்வாமிகள் மற்றும் திருவிசைநல்லூர் ஸ்ரீ ஸ்ரீதர் அய்யாவாள் ஆகிய மூன்று மகான்களும் குரு கீர்த்தனைகள் பாடப்படுகின்றன. இதன் தொடர்ச்சியான நிகழ்ச்சிகள்

அடுத்த இதழில் தொடரும்

**ஸ்ரீ சேஷ ஒளி**

திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
குருஜி கே.வி.எல்.என். சர்மா

வெளியீட்டாளர்
திரு. கே. ராமசுப்ரமணியன்

உதவி ஆசிரியர்
திருமதி. என். ஜானகி

கௌரவ ஆசிரியர்கள்
திரு. மருதபரணி
திருமதி. உமாபரணி

அலுவலக உதவியாளர்
எஸ்.கலையரசி

வடிவமைப்பு
திருமதி. பிரேமா

பதிவு அலுவலகம்
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info

## டிரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த டாலர், பேனாக்கள் மற்றும் சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்

## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

**பால் விநியோகம் :** பிரதி ஞாயிறு தோறும் சக்திபீட பாலாலயத்தில் குழந்தை களுக்கு பால் விநியோகம் நடைபெறு கிறது. இந்த அரிய கைங்கர்யத்தில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் ரூ. 500 செலுத்தி தாங்களே நேரில் வந்து கொடுக் கலாம்.

**இதனால் ஏற்படும் பலன்கள் :**

குழந்தைகள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள்.

தேர்வு சமயத்தில் ஏற்படும் வீண் பயம் நீங்கி மனத் தெளிவு ஏற்படும்.

தீராத வியாதிகள் தீரும், சித்தர்கள் அருள் கிடைக்கும்.

இலவச பால் விநியோகத்திற்கு நன்கொடை அளித்து ஸ்ரீ கிருஷ்ணனின் அருளையும் மகானின் அருளையும் சித்தர்களின் அருளையும் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நித்திய அன்னதானம் :** சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் வழங்கப்படுகிறது. வடை பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் ரூ. 2500 நன்கொடை களுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.



தானத்தில் சிறந்தது அன்னதானம்
அன்னதானம் செய்வோம்
ஆனந்தம் அடைவோம்

## அன்பார்ந்த சேஷ ஒளி வாசகர்களே

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.


ஸ்ரீ சேஷ ஒளி
திருவருட்சுடர்

அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.